

மதுராந்தகம் சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தலில் போட்டியிடும் கழக வெற்றி வேட்பாளர் இ.பரந்தாமனை ஆதரித்து அருங்குணம் ஊராட்சி, காந்தி நகரில் உள்ள தூய ஆரோக்கிய அன்னை ஆலயத்தின் பங்கு தந்தையை காஞ்சிபுரம் வடக்கு மாவட்டச் செயலாளர் – முன்னாள் அமைச்சர் தா.மோ.அன்பரசன் நேரில் சந்தித்து, உதயசூரியன் சின்னத்திற்கு ஆதரவு கேட்டு வாக்கு சேகரித்தார். அருகில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி, எஸ்.இனிகோ இருதயராஜ், சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு செயலாளர் சுபேர்கான், தாம்பரம் மாநகராட்சி மேயர் க.வசந்தகுமாரி, பகுதி கழகச் செயலாளர்கள் த.ஜெயக்குமார், இ.ஜோசப் அண்ணாதுரை, வே.கருணாநிதி, இ.எஸ்.பெர்னாட் உள்ளிட்டோர் உள்ளனர்.



மதுராந்தகம் தொகுதியில் அன்னங்கால், திம்மாவரம், மலைப்பாளையம், ஆடிசன்தோப்பு, ராமாபுரம் பகுதிகளில் முன்னாள் அமைச்சர் இராஜகண்ணப்பன் இ.பரந்தாமனை ஆதரித்து வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார். அன்னங்கால் ந.ஹரி, மகேஷ், கிளைச் செயலாளர்கள் துளசி, சம்பத், சிவா, ரவி மற்றும் பவளவண்ணன் உள்ளிட்ட கழகத் தோழர்கள் பலரும் உடன் சென்றனர்.

மதுராந்தகம் தொகுதி இ.பரந்தாமனை ஆதரித்து

திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி தேர்தல் பிரச்சாரம்!

முன்னாள் அமைச்சர்கள் எ.வ.வேலு – ஆர்.ராஜேந்திரன் – பி.கே.சேகர்பாபு – தா.மோ.அன்பரசன் மற்றும் க.சுந்தர் பங்கேற்பு!

மதுராந்தகம், அக்.2 மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலில் கழக வேட்பாளர் இ.பரந்தாமன் அவர்களை ஆதரித்து, மதுராந்தகம் வடக்கு ஒன்றியத்திற்குட்பட்ட ஊராட்சியில் 01.10.2026 வியாழக்கிழமை மாலை சரியாக 6.00 மணியளவில், சேலம் மத்திய மாவட்டம், சென்னை கிழக்கு மாவட்டம் பொறுப்பேற்று பணியாற்றும் வையாவூர் - மூசிவாக்கம் பேட்டையில் காஞ்சிபுரம் தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் க. சுந்தர் தலைமையில், காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் தா.மோ. அன்பரசன் முன்னிலையில், அதிரடி.அன்பழகன் தொடக்க உரையாற்ற, முன்னாள் அமைச்சர்கள் எ.வ.வேலு.எம்.எல்.ஏ, சேலம் ஆர்.ராஜேந்திரன்,பி.கே.சேகர்பாபு.எம்.எல்.ஏ ஆகியோர் உரையாற்றிய பொதுக்கூட்டத்தில் திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் உரையாற்றி வாக்கு சேகரிக்கிறார்.

இந்த பொதுக்கூட்டத்தில் மேயர் பிரியா ராஜன், கே.எஸ்.ரவிச்சந்திரன், நா.எழிலன், தமிழன் பிரசன்னா, ஜோசப் சாமுவேல், சைதை சாதிக், சேப்பாக்கம் பிரபாகரன். திராவிடர் கழக நிர்வாகிகள் இரா. குணசேகர் மாநில ஒருங்கிணைப்பாளர், வி.பன்னீர் செல்வம் மாநில ஒருங்கிணைப்பாளர், அ.வெ.முரளி காஞ்சிபுரம் மாவட்ட செயலாளர், அ.செம்பியம் செங்கல்பட்டு மாவட்ட தலைவர், செந்தூர்பாண்டி மாநில மாணவரணி செயலாளர், நரசிம்மன் செங்கல்பட்டு மாவட்ட செயலாளர், மதுராந்தகம் தொகுதி நிர்வாகிகள் சத்யசாய்நாதன், திருஞான செல்வம், ஆறுமுகம், தனசேகர்,தேவராஜ், பரந்தாமன், வெங்கடேசன், வெங்கடேசன், மணிகண்டன், காமராஜ் மற்றும் கழக நிர்வாகிகள் முன்னோடிகள், செயல் வீரர்கள் மற்றும் ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.




மதுராந்தகம் சட்டமன்ற இடைத்தேர்தலில் போட்டியிடும் கழக வேட்பாளர் வழக்கறிஞர் இ. பரந்தாமனை ஆதரித்து மதுராந்தகம் தொகுதியில் திருவள்ளூர் மேற்கு மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள இடங்களில் மாவட்ட கழக செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் பொதுமக்களிடம் திமுக செய்த சாதனைகளை எடுத்துக் கூறி உதயசூரியன் சின்னத்திற்கு தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார் . உடன் கே.திராவிடபக்தன், ப.சிட்டிபாபு, சி.ஜெ.சீனிவாசன் , கே.அரிகிருஷ்ணன், டி.மோதிலால், பி.டி.சந்திரன், விஜயலு, மாவட்ட கவுன்சிலர், ராஜராமன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.



மதுராந்தகம் சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தலில் கழக வெற்றி வேட்பாளர் இ.பரந்தாமனை ஆதரித்து சோழிங்கநல்லூர் மத்திய பகுதிக்கு ஒதுக்கப்பட்ட மதுராந்தகம் வடக்கு ஒன்றியம் பிலாப்பூர் ஊராட்சியில் பாகம் எண் 27 ல் அன்று அம்பேத்கர் தெரு, திருவள்ளூர் வீதி, இந்திரா காந்தி தெரு, மகாத்மா காந்தி தெரு, கழக அரசின் சாதனைகளையும், தற்போது உள்ள த.வெ.க அரசின் அவலங்களை சோழிங்கநல்லூர் மேனாள் சட்டமன்ற உறுப்பினர் ச.அரவிந்தரமேஷ் எடுத்துரைத்து உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தனர். இந்நிகழ்வில், வட்ட கழக செயலாளர் G.ரவி, மதுராந்தகம் வடக்கு ஒன்றிய பொருளாளர் S.தேவராஜ், பிலாப்பூர் கிளை செயலாளர் J.பழனி, மற்றும், கோட்டீஸ்வரன், முத்துக்குமரன், முத்துசாமி,உமாபதி, சரவணன், ராகுல், பிரவீன்,உள்ளிட்ட கழக நிர்வாகிகள் அனைவரும் உடனிருந்தனர்.



மதுராந்தகம் சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தலில் கழக வெற்றி வேட்பாளர் இ.பரந்தாமனை ஆதரித்து சோழிங்கநல்லூர் மத்திய பகுதிக்கு ஒதுக்கப்பட்ட மதுராந்தகம் வடக்கு ஒன்றியம் பிலாப்பூர் ஊராட்சியில் பாகம் எண் 27 ல் அன்று அம்பேத்கர் தெரு, திருவள்ளூர் வீதி, இந்திரா காந்தி தெரு, மகாத்மா காந்தி தெரு, கழக அரசின் சாதனைகளையும், தற்போது உள்ள த.வெ.க அரசின் அவலங்களை சோழிங்கநல்லூர் மேனாள் சட்டமன்ற உறுப்பினர் ச.அரவிந்தரமேஷ் எடுத்துரைத்து உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தனர். இந்நிகழ்வில், வட்ட கழக செயலாளர் G.ரவி, மதுராந்தகம் வடக்கு ஒன்றிய பொருளாளர் S.தேவராஜ், பிலாப்பூர் கிளை செயலாளர் J.பழனி, மற்றும், கோட்டீஸ்வரன், முத்துக்குமரன், முத்துசாமி,உமாபதி, சரவணன், ராகுல், பிரவீன்,உள்ளிட்ட கழக நிர்வாகிகள் அனைவரும் உடனிருந்தனர்.



சென்னை தென் மேற்கு மாவட்ட இலக்கிய அணி சார்பில் மாவட்ட செயலாளர் மயிலை த.வேலு ஆலோசனையின் பேரில் இலக்கிய அணி மாவட்ட அமைப்பாளர் விஜய் வெங்கடேசன் தலைமையில் மதுராந்தகம் தொகுதி இரும்பேடு கிராமம் பாகம் எண். 283, 284 இல் இலக்கிய அணி சார்பில் இ.பரந்தாமனை ஆதரித்து தீவிர பிரச்சாரம் நடைபெற்றது. இந்த பிரச்சார நிகழ்வில் சென்னை தென் மேற்கு மாவட்ட இலக்கிய அணி மாவட்ட துணை அமைப்பாளர் அயன் ரமேஷ், MAS.செந்தில் குமார், தொண்டர் அணி மாவட்ட துணை அமைப்பாளர் வி.மணிகண்டன், மயிலை கிழக்கு பகுதி இலக்கிய அணி அமைப்பாளர் எல்.தட்சிணாமூர்த்தி, மயிலை மேற்கு பகுதி அமைப்பாளர் க.கணபதி, தலைவர் பி.எஸ்.ஆறுமுகம், எஸ்.மோகன், ஜி.கே. சிங்காரவேல் கலந்துகொண்டனர்.

தாய்மாமன் தங்க மோதிரம் திட்டத்தால்

அரசு மருத்துவமனைகளில் மகப்பேறு சிகிச்சையில் நெருக்கடி?

மதுரை.அக்.2- மருத்துவ கட்டமைப்புகளையும், மருத்துவர்கள், செவிலியர்கள் எண்ணிக்கையையும் அதிகரிக்காமல் 'தாய்மாமன் தங்க மோதிரம்' திட்டம் தொடங்கி வைக்கப்பட்டுள்ளதால், அன்றாடம் மகப்பேறு சிகிச்சையில் பல்வேறு சவால்களையும், சிரமங்களையும் சந்திக்கும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளதாக மருத்துவர்கள், செவிலியர்கள் தெரிவித்துள்ளனர்.

மகப்பேறு சிகிச்சைப் பிரிவு, பச்சிளம் குழந்தைகள் சிகிச்சைப்பிரிவுகளை மேம்படுத்தாமலேயே, தாய்மாமன் தங்க மோதிரம் திட்டம் தொடங்கப்பட்டுள்ளதால் தற்போது உள்ள மருத்துவக் கட்டமைப்பு, மருத்துவர்கள், பணியாளர்களை கொண்டு திட்டத்தை செயல்படுத்துவதுடன் மகப்பேறு சிகிச்சையை உரிய முறையில் மேற்கொள்ள முடியுமா? என்ற கேள்வி எழுந்துள்ளது.

இதுகுறித்து மருத்துவத் துறையை சேர்ந்த சில உயர் அதிகாரிகள் கூறியதாவது: தனியார் மருத்துவமனையில் ஒரு குடும்பம் பிரசவத்துக்கு சராசரியாக ரூ.70 ஆயிரம் செலவிடுகிறது.

இந்த செலவினத்தை குறைத்து, இலவசமாக அரசு மருத்துவமனைகளில் பிரசவங்கள் மேற்கொள்வதற்கு தாய்மாமன் தங்க மோதிரம் திட்டம் செயல்படுத்துவதாக சுகாதாரத் துறை அமைச்சர் பெருமிதம் தெரிவித்தார்.

ஆனால், ஏற்கெனவே அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள், தாலுகா மருத்துவமனைகள், மாவட்ட அரசு மருத்துவமனைகள் மற்றும் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் நிலவும் மகப்பேறு மருத்துவர்கள் மற்றும் செவிலியர்கள் பற்றாக்குறையை போக்கவும், மகப்பேறு கட்டமைப்பு வசதிகள், பச்சிளம் குழந்தைகள் பராமரிப்பையும் உறுதிப்படுத்தாமலும் அவசர கோலத்தில் இந்த திட்டத்தை செயல்படுத்துவது ஏற்புடையது அல்ல என்ற விமர்சனமும் எழுந்துள்ளது.

தற்போது திருச்சி, மதுரை போன்ற நகரங்களில் உள்ள அரசு மருத்துவமனைகளில் தினமும் சராசரியாக 35 முதல் 40 பிரசவங்கள் நடைபெறுகின்றன. தங்க மோதிரம் திட்டத்தால் இந்த எண்ணிக்கை இனி அதிகரிக்கக்கூடும்.

மேலும், இங்கு பிறக்கும் குழந்தைகளுக்கு வழங்கப்படும் மோதிரங்களை பாதுகாக்க பெட்டகங்கள், சிசிடிவி கேமராக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதுதவிர, மோதிரம் வழங்கும் திட்டத்தை செயல்படுத்த மருத்துவர்கள், அமைச்சு பணியாளர்கள், தொழில்நுட்ப உதவியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

தங்க மோதிரம் வைக்கப்பட்டுள்ள அட்டையில் க்யூஆர் கோடு மூலம், அது எந்த குழந்தைக்குரியது என்பது குறித்து தெரிந்து கொள்ளலாம். அந்த மோதிரம் குழந்தைக்கு வழங்கப்பட்டவுடன், தாயின் கைரேகை பதிவு செய்யப்படும். இவை அனைத்தும் சிசிடிவி கேமரா முன்பு வைத்து நடைபெற உள்ளது. மகப்பேறு சிகிச்சைகளை சிறப்பாக மேற்கொண்டு தாய், சேய் பாதுகாப்பை உறுதி செய்வதை தாண்டி, இந்த திட்டத்தை சிறப்பாகச் செயல்படுத்தும் நெருக்கடியும் மருத்துவமனை நிர்வாகத்துக்கும், மருத்துவர்களுக்கும் ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு மகப்பேறு சிகிச்சை, தங்க மோதிரம் திட்டத்திலேயே முழுக்கவனத்தையும் மகப்பேறு மருத்துவத் துறை செலுத்தும் நிலை மருத்துவக் கல்லூரி மாணவர்களுக்கான பயிற்சி வகுப்புகள் பாதிக்கப்படும் வாய்ப்பும் உள்ளது.

அதனால், மாற்று வழியில் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும். இல்லாவிடில், கூடுதல் பணியாளர்களை நியமிப்பது அவசியம். இவ்வாறு அவர்கள் கூறினர்.

முன்னாள் மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர்

த.பாபு சகோதரி எஸ்.திலகா மறைவு!

தாயகம் கவி – எம்.ஸ்ரீதரன் – கழகத்தினர் அஞ்சலி!

சென்னை, அக்.2 சென்னை தெற்கு மாவட்டம், சைதை மேற்கு பகுதி 140வது வட்டத்தில் முன்னாள் வழக்கறிஞர் அணி மாவட்ட அமைப்பாளர் த.பாபு அவர்களின் மூத்த சகோதரி, கழக மகளிர் அணி துணை அமைப்பாளர் எஸ்.திலகா மறைவெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

இறுதி ஊர்வலத்தில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ப.தாயகம்கவி, பொதுக்குழு உறுப்பினர் வழக்கறிஞர் எம்.ஸ்ரீதரன், எம்.சி. பங்கேற்றனர்.

சென்னை தெற்கு மாவட்டம், சைதை மேற்கு பகுதி 140வது வட்டத்தில் முன்னாள் வழக்கறிஞர் அணி மாவட்ட அமைப்பாளர் த.பாபு, தகவல் தொழில் நுட்ப அணியை சார்ந்த தமிழ்வாணி ஆகியோரின் மூத்த சகோதரி, வழக்கறிஞர் சா.சாந்ததிலக், சா.சுமதி, சா.சாந்தகீர்த்தி, சா.இலக்கியா, சா.சாந்தபிரியா அவர்களின் தாயார், பி.மணிமாறன் மாமியார், சா.ஷர்ஷினி, சா.விசாந்த், பி.எம்.குகன், பி.எம்.யுவன் ஆகியோரின் பாட்டி, கழக மகளிர் அணி துணை அமைப்பாளர் எஸ்.திலகா 30.09.2026 (புதன்கிழமை) இரவு 9.30 மணியளவில் காலமானார்.

அன்னாரின் இறுதி ஊர்வலம் 01.10.2026 வியாழக்கிழமை 4.30 மணியளவில் மேற்கு மாம்பலம், பன்னீர்செல்வம் நகர், படவேட்டம்மன் கோயில் தெரு, நெ.14ல் உள்ள இல்லத்தில் புறப்பட்டு கண்ணம்மாப்பேட்டை இடுகாட்டில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

இறுதி ஊர்வலத்தில் முன்னாள் திரு.வி.க சட்டமன்ற உறுப்பினர், கழக துணை அமைப்பு செயலாளர் ப.தாயகம்கவி, பொதுக்குழு உறுப்பினரும், 140-வது வார்டு மாமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் எம்.ஸ்ரீதரன், தமிழ்நாடு, பாண்டிச்சேரி பார் கவுன்சில் உறுப்பினர் வழக்கறிஞர் ஜி.மோகனகிருஷ்ணன் மற்றும் நீதிமன்ற வழக்கறிஞர்கள் உள்ளிட்ட கழக வழக்கறிஞர்கள், கழக நிர்வாகிகள், கழக தோழர்கள், பெருதிரளாக பங்கேற்றனர்.

இதுதான் அந்த கேரியரின் உச்சமா, டம்மி சார்?

தி.மு.க. ஐ.டி. விங் விமர்சனம்!



பேசிப் பார்த்தாச்சு, நடித்துப் பார்த்தாச்சு, அழுதும் பார்த்தாச்சு; எதுவுமே பலிக்காததால், தாராபுரம் தொகுதி மக்கள் தங்களுக்குப் பொட்டி பாமாவும் த.வெ.க.வும் செய்த துரோகத்தை மறக்காமல் செருப்பால் அடித்து விரட்டி வருவதால், வாக்குக்கு பணத்தையும், டிபன் கேரியரையும் இறக்கி வருகிறது இந்தத் திருட்டுச் சக்தி.

இவ்வாறு தி.மு.க. ஐ.டி. விங் விமர்சித்துள்ளது.



மதுராந்தகம் சட்டமன்ற இடைத்தேர்தலில் கழக வேட்பாளர் வழக்கறிஞர் இ.பரந்தாமனை ஆதரித்து அச்சரப்பாக்கம் வடக்கு ஒன்றியம் திருவள்ளூர் கிழக்கு மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள பகுதியில் மாவட்ட கழக செயலாளர் வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ் ராஜ் வீடு வீடாகச் சென்று உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார். உடன் மாநில மாவட்ட நிர்வாகிகள் மு.பகலவன், ஜெ.மூர்த்தி, கே.ஜி.பாஸ்கர் சுந்தரம், கே.வி.ஜி. உமா மகேஸ்வரி வேணு, மு.கதிரவன், மாதரபாக்கம் பா.செ.குணசேகரன், ஏ.வி.ராமமூர்த்தி, டி.கே. சந்திரசேகர், ஆ.சத்தியவேலு, ஆ.ராஜா, மு.முரளிதரன், பா.து.தமிழரசன் உள்பட திமுக நிர்வாகிகள்.



மதுராந்தகம் (தனி) இடைத்தேர்தலையொட்டி கழக வேட்பாளர் இ.பரந்தாமனுக்கு அருங்குணம் ஊராட்சியில் உள்ள பாகம் 248ல் அடங்கிய, பிராமணர் தெரு, தெற்கு தெரு, ஏரிக்கரை தெரு, ஆகிய தெருக்களில், ஆலந்தூர் தெற்கு, வடக்குப் பகுதிச் செயலாளர்கள் என். சந்திரன் எம்.சி., பா. குணாளன் ஆகியோர் தலைமையில் வீடு வீடாக சென்று, உதயசூரியன் சின்னத்தில் வாக்குகள் சேகரித்தனர். இதில் வட்டச் செயலாளர்கள் ஜெ. நடராஜன், கே.பி. முரளிகிருஷ்ணன், ஜெ. செல்வேந்திரன் மற்றும் கோடீஸ்வரன், நெய்வேலி தங்கம், மகாலிங்கம், மாரியப்பன், சுரேஷ் தேவராஜ், ரங்கன், ரமணா, பிரான்சிஸ், விக்கி (எ) விக்னேஷ், பிரபு, பாலாஜி, பிரகாஷ், ஷெரீப், சபரி, கிட்டு, கோகுல், வினோத், ஆகியோர் உடன் இருந்தனர்.



மதுராந்தகம் சட்டமன்ற இடைத்தேர்தலில் கழக வேட்பாளர் இ.பரந்தாமனை ஆதரித்து மதுராந்தகம் தெற்கு ஒன்றியம் குன்னத்தூர் ஊராட்சி பாகம் எண் 85ல் தச்சூர் கிராமத்தில் தாம்பரம் மாநகர செயலாளர் எஸ்.ஆர். ராஜா உதயசூரியன் சின்னத்தில் வாக்கு சேகரித்தார். உடன் மாவட்ட பிரதிநிதி –ஒன்றிய கவுன்சிலர் டி. ரோக்கும்மா, காஞ்சி தெற்கு மாவட்ட சிறுபான்மை நல உரிமைப்பிரிவு துணை அமைப்பாளர் குன்னத்தூர் ஊராட்சி மன்ற தலைவர் ஜி.ஸ்டீபன்சுவரி, 4வது மண்டல குழு தலைவர், பெருங்களத்தூர் வடக்கு பகுதி செயலாளர் டி.காமராஜ், கிளை கழக செயலாளர் எஸ்.பத்மநாபன், பி.அரிபாலசந்தர், தலைமை கழக பேச்சாளர் கி.வேல்மணி, மாமன்ற உறுப்பினர்கள் டி.ஆர்.கோபி, ரமணிஆதிமூலம், சி.சுரேஷ், எல். பெரியநாயகம், வீ.கார்த்திக் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உள்ளனர்